


**09. 06. 2026**

தலைப்புச் செய்திகள்

1. மத்திய அரசின் 12 ஆண்டு கால மேம்பாட்டு திட்டங்களால் நம் தேசம் உலக அளவில் தனித்துவ அடையாளத்துடன் திகழ்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

2. வேளாண்மை மற்றும் விவசாய வளங்களின் பாலமாக உணவு பதப்படுத்துதல் துறை உருவெடுத்துள்ளது என்று மத்திய அமைச்சர் திரு. சிராக் பாஸ்வான் கூறியுள்ளார்.

3. தமிழ்நாட்டில் சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை திட்டத்தை, முதலமைச்சர் திரு. விஜய் இன்று மாலை சென்னையில் தொடங்கிவைக்கிறார்.

4. த.வெ.க அரசுக்கு ஆதரவு அளித்த அஇஅதிமுகவின் 21 சட்டமன்ற உறுப்பினர்கள் மீது தகுதி நீக்க நடவடிக்கை இல்லை என்று சட்டப்பேரவை தலைவர் திரு. J. C. D பிரபாகர் அறிவித்துள்ளார்..

5. சூரிய ஒளி மின்சக்தி உற்பத்திக்கு விரைவில் புதிய கொள்கை வகுக்கப்படும் என்று மாநில மின்துறை அமைச்சர் திரு. நிர்மல் குமார் கூறியுள்ளார்.

இனிவிரிவான செய்திகள்

**********

பிரதமர்

நாட்டின் இளைஞர்கள் மகளிர் விவசாயிகளின் ஆளுமையில் பிஜேபி தலைமையிலான மத்திய அரசு கடந்த 12 ஆண்டுகளாக அர்ப்பணிப்புடன் செயலாற்றி உள்ளதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

140 கோடி மக்களின் விருப்பங்கள் மற்றும் தேச உணர்விற்கு உயர் முன்னுரிமை வழங்கப்பட்டு நம்பிக்கை, வளர்ச்சி, பொதுநலன் பாதையில் அரசு உறுதியுடன் முன்னேறி செல்வதாக தமது சமூக வலைதள பதிவில் கூறியுள்ளார்.

மத்திய அரசின் அயராத தொடர் முயற்சிகளால் கட்டமைப்பு தொடங்கி, டிஜிட்டல் புரட்சி வரையுள்ள பல்வேறு தளங்களில், சர்வதேச அளவில், நம் தேசம் தனித்துவ அடையாளத்துடன் திகழ்வதாகவும் அவர் பெருமிதம் தெரிவித்தார்.

நல்லாட்சி, வளம், மக்கள் சேவை என்ற குறிக்கோளுடன் வளர்ச்சி அடைந்த பாரதத்திற்கான இலக்கை எட்ட மத்திய அரசு அயராது தொடர்ந்து செயலாற்றும் என்றும் பிரதமர் உறுதியளித்துள்ளார்.

**********

பிரதமர் சாதனை

பிஜேபி தலைவர் திரு.நரேந்திரமோடி 3ஆவது முறையாக நாட்டின் பிரதமராக பதவி ஏற்று இரண்டு ஆண்டுகள் இன்று நிறைவடைந்த நிலையில் அவரது கடந்த 12 ஆண்டுகளாக இந்தியா மாபெரும் வளர்ச்சியை கண்டுள்ளதாக உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா பாராட்டு தெரிவித்துள்ளார்.

தேச பணியில் அர்ப்பணிப்புடன் செயலாற்றும் பிரதமரின் ஆட்சியில் ஏழை எளிய மக்களின் நலன்களும் வாழ்வாதாரமும் உறுதி செய்யப்பட்டிருப்பதாக எடுத்துரைத்தார்.

பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் விடுத்துள்ள செய்தியில் சமூகத்தின் அனைத்து தரப்பிலும் வளர்ச்சி ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

வளர்ச்சி அடைந்த பாரத பாதையில் இந்தியா பயணிக்கும் இத்தருணத்தில் பிரதமரின் சீரிய தலைமைக்கு கடந்த 12 ஆண்டு சாதனைகள் சான்றாக திகழ்வதாகவும் கூறியுள்ளார்.

**********

அமித்ஷா

எல்லை பகுதிகளில் சரக்கு போக்குவரத்தை கையாள வகை செய்யும் நில வழி மேலாண்மை புதிய அமைப்பை மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா புதுதில்லியில் இன்று பிற்பகல் துவக்கிவைக்கிறார்.

எல்லை பகுதி போக்குவரத்தை மின்னணு தொழில்நுட்பம் மூலம் திறம்பட கையாண்டு,

வெளிப்படைத்தன்மையையும், பாதுகாப்பையும் உறுதி செய்து, மக்கள் நடமாட்டத்தை கண்காணிக்க, இந்த தொழில்நுட்பம் வழிகோலும் என்று உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

வர்த்தக போக்குவரத்தை வலுப்படுத்தி, இணைப்புகளின் தரத்தையும், தேச பாதுகாப்பையும் உறுதி செய்ய மத்திய அரசு நிர்ணயித்துள்ள இலக்குகளை முன்னெடுத்து செல்ல இது பயனளிக்கும் என்று அமைச்சகம் கூறியுள்ளது.

தளவாட பரிவர்த்தனைகளை முறைப்படுத்துவதோடு, துறைமுகங்களிலும், விமான நிலையங்களிலும் அமைந்துள்ள நவீன டிஜிட்டல் தொழில்நுட்பங்களுக்கு இணையாக இந்த புதிய நில வழி மேலாண் அமைப்பு திகழும் என்று கூறினார்.

**********

ஜெய்சங்கர்

நாட்டின் வெளியுறவு கொள்கை கடந்த 12 ஆண்டுகளில் பல்வேறு முக்கிய மாற்றங்களை சந்தித்துள்ளதாக வெளியுறவு அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்தார்.

பாஸ்போட் விநியோகம், ஆவண சான்றொப்பம், போன்றவை தடையில்லாமல் நடைபெறுவதால் பொதுமக்கள் பெரிதும் பயனடைந்திருப்பதாக கூறினார்.

இதுதவிர பொதுமக்கள் தங்கள் குறைகளை தெரிவிப்பதற்காக டிஜிட்டல் இணையதளம்

ஏற்படுத்தப்பட்டு அதன்மூலம் குறைகள் நிவர்த்தி செய்யப்படுவதாகவும் எடுத்துரைத்தார்.

உலகளாவிய பணியிடங்களுக்கு இந்திய மக்கள் செல்வதற்கான வசதிகளை மத்திய அரசு செய்து கொடுத்திருப்பதோடு, நாட்டின் வர்த்தகத்தை வெளிநாடுகளில் சந்தை படுத்துவதற்கான வாய்ப்புகளும் உருவாக்கப்பட்டிருப்பதாக எடுத்துரைத்ததார்.

இந்நடவடிக்கையால் ஏற்றுமதி அதிகரித்து இந்திய உற்பத்தி பொருட்கள் சர்வதேச சந்தைகளில் நுழைந்ததாகவும் குறிப்பிட்டார்.

44 துதரகங்களும், துணை தூதரகங்களும் திறக்கப்பட்டதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

மத்திய அரசின் முயற்சிகளால் நம் நாட்டு மக்கள் வெளிநாடுகளுக்கு நம்பக தன்மையுடனும் மதிப்புடனும் செல்ல வழி வகை செய்யப்பட்டதாக டாக்டர் ஜெய்சங்கர் குறிப்பிட்டார்.

**********

சிராக் பாஸ்வான்

வேளாண்மை மற்றும் விவசாய வளங்களின் பாலமாக உணவு பதப்படுத்துதல் துறை திகழ்வதாக மத்திய உணவு பதப்படுத்துதல் தொழில்கள் துறை அமைச்சர் திரு. சிராக் பாஷ்வான் தெரிவித்துள்ளார்.

குஜராத் மாநிலம் அஹமதாபாத்தில் வேளாண்மை சார்ந்த இரண்டு நாள் நிகழ்வில் இன்று துவக்க

உரையாற்றிய அவர், வேலை வாய்ப்பு உருவாக்கத்தில் உணவு பதப்படுத்துதல் துறையின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.

அறுவடைக்கு பிந்தய வேளாண் இழப்புகளை குறைத்து, விவசாயிகளின் வருவாயை பெருக்கி வாழ்வாதாரத்தை முன்னெடுத்து செல்வதிலும் இத்துறை முக்கிய பங்காற்றுவதாக குறிப்பிட்டார்.

உலகளாவிய உணவு பதப்படுத்துதல் மையமாக இந்தியா வேகமாக வளர்ச்சி பெற்று வருவதாகவும் திரு.சிராக் பாஷ்வான் கூறினாா.

இந்த இரண்டு நாள் வேளாண் நிகழ்ச்சியில் கொள்கைகள் உருவாக்கம், வேலை வாய்ப்புகளுக்கான திறவுகோள், தெற்காசிய பகுதிகளின் நிலையான வளர்ச்சி உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்த ஆலோசனைகள் இடம்பெறுகின்றன.

**********

மாநிலங்களவை

நாட்டில் காலியாக உள்ள 24 மாநிலங்களவை உறுப்பினர் பதவி இடங்களுக்கு வரும் 18ஆம் தேதி நடைபெறும் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் இன்று பரிசீலிக்கப்படுகின்றன.

இதன்படி தமிழகத்தில் காலியாக உள்ள ஒரு மாநிலங்களவை உறுப்பினர் பதவி இடத்திற்கு த.வெ.க கூட்டணியில் இடம்பெற்றுள்ள காங்கிரஸ் கட்சியின்

திரு.பிரவீன் சக்கரவர்த்தி தாக்கல் செய்த வேட்பு மனு இன்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

**********

பிரிக்ஸ்

பிரிக்ஸ் நாடுகளின் வேளாண் மாநாடு மத்திய பிரதேச மாநிலம் இந்தோரில் இந்திய தலைமைத்துவத்தின் கீழ் இன்று தொடங்கியது.

5 நாட்கள் நடைபெறும் இம்மாநாட்டில் பிரேசில், ரஷ்யா சீனா தென்னாப்பிரிக்காவின் வேளாண் அமைச்சர்கள் உட்பட 21 நாடுகளை சேர்ந்த விவசாய பிரதிநிதிகள் பங்கேற்றுள்ளனர்.

உணவு பாதுகாப்பு, புதிய பண்ணை தொழில்நுட்பங்கள், காலநிலை மாற்றத்திற்கு உகந்த வேளாண் பணிகள், வர்த்தகம், சிறு குறு விவசாயிகளுக்கு ஆளுமை உள்ளிட்டவை குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

**********

முதலமைச்சர்

தமிழ்நாட்டில் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை திட்டத்தை, முதலமைச்சர் திரு.விஜய் இன்று மாலை சென்னையில் தொடங்கிவைக்கிறார்.

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகளை தடுத்தல்,

குற்றங்கள் நிகழும் பகுதிகளை முன்கூட்டியே கண்டறிந்து நடவடிக்கை எடுத்தல்,

பொது இடங்களில் கண்காணிப்பு,

அனைவரையும் ஒருங்கிணைத்து பாதுகாப்பான சமூகத்தை உருவாக்குதல், உள்ளிட்ட பணிகளை இப்படை மேற்கொள்ளும்.

**********

செங்கோட்டையன்

தமிழக அரசு கோரியிருந்த ஆயிரம் கோடி ரூபாய் பேரிடர் மேலாண்மை நிதியை மத்திய அரசு வழங்கியிருப்பதாக மாநில வருவாய் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் திரு. கே. ஏ. செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

சென்னை எழிலகத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலத்தில் இணைய வழியாக விண்ணப்பிக்கும் மனுக்கள் மீது உடனடி தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கூறினார்.

புதிய குடும்ப அட்டை, சாதி சான்றிதழ், முதியோர் ஓய்வூதியம் உள்ளிட்ட பல்வேறு நல திட்ட உதவிகளை கோரி விண்ணப்பிக்கும் மனுக்கள் மீது ஐந்து நாட்களில் தீர்வு காண அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

**********

J. C. D பிரபாகர்

த.வெ.க அரசுக்கு நம்பிக்கை வாக்கெடுப்பின்போது ஆதரவு அளித்த 21 சட்டமன்ற உறுப்பினர்கள் மீது அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமியின் பரிந்துரையின் பேரில் தகுதி நீக்க நடவடிக்கை இல்லை என்று சட்டப்பேரவை தலைவர் திரு. J. C. D பிரபாகர் தெரிவித்துள்ளார்.

சென்னை தலைமை செயலகத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதர நான்கு உறுப்பினர்கள் மீதான நடவடிக்கை தொடங்கியுள்ளதாகவும், கூறினார்.

வாய்ஸ்

**********

நிர்மல் குமார்

தமிழ்நாட்டில் மின்வெட்டு பிரச்சனை உடனுக்குடன் களையப்படுவதாக மாநில மின்துறை அமைச்சர் திரு.நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் சமூக ஊடகங்கள் மூலம் பெறப்படும் மின்விநியோகம் தொடர்பான குறைபாடுகளும் சரிசெய்யப்படுவாக கூறினார்.

சூரிய ஒளி மின்சக்தி உற்பத்திக்கு விரைவில் புதிய கொள்கை வகுக்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

**********

ஆதவ் அர்ஜூனா

தமிழகத்தில் பல்வேறு பிரிவுகளின் கீழ் விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கத்தொகையை மாநில விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. ஆதவ் அர்ஜூனா சென்னையில் இன்று வழங்கினார்.

இதன்படி பாரா பேட்மிண்டன் வீராங்கனை துளசிமதி முருகேசனுக்கு 10 லட்ச ரூபாய்க்கான காசோலையையும்

பாரா துப்பாக்கி சுடுதல் வீரர் மனோஜ் குமாருக்கு 6 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் விளையாட்டு உபகரணம் மற்றும் 15 லட்சத்து 65 ஆயிரம் ரூபாயும், அமைச்சர் இன்று வழங்கினார்.

**********

இருவரி

திண்டுக்கல் மாவட்டத்தில் அலைபேசி செயலி மூலம் போதை பொருட்கள் சம்மந்தமான தகவல்களை தெரிவிக்கலாம் எனவும், தெரிவிப்போர் குறித்த தகவல் ரகசியமாக காக்கப்படும் என்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.பிரதீப் கூறியுள்ளார்.

சேலம் ரயில்வே கோட்டத்தில் லெவல் கிராசிங்கில் விபத்துகளை முற்றிலும் தடுக்கும் வகையில், பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அதன் ரயில்வே கோட்ட மேலாளர் திரு.பன்னாலால் தெரிவித்துள்ளார்.

சர்வதேச ரயில்வே லெவல் கிராசிங் விழிப்புணர்வு தினத்தை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், வீதி நாடகம் மூலமும், துண்டு பிரசுரங்கள் மூலமும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட உள்ளதாக தெரிவித்தார்.

**********

தூத்துக்குடி

கிழக்கு கடற்கரை பகுதிகளில் மீன்படி தடை காலம் வரும் 14ஆம் தேதி நிறைவடைய உள்ள நிலையில் தூத்துக்குடி மாவட்டத்தில் மீனவர்கள் கடலுக்குள் செல்வதற்கான முன்னேற்பட்டு பணிகளை மேற்கொண்டு வருவதாக எமது செய்தியாளர் கூறுகிறார்..

வாய்ஸ்

**********

தண்ணீர் திறப்பு

திருப்பூர் மாவட்டம் திருமூர்த்தி அணையிலிருந்து பாலாறு படுகை பாசன பகுதிகளுக்கு இன்று தண்ணீர் திறக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

**********

கிரிக்கெட்

தம்புலாவில் நடைபெறும் முத்தரப்பு ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இலங்கை ஏ அணி வெற்றிபெற 278

ரன் என்ற இலக்கை இந்திய ஏ அணி நிர்ணயித்துள்ளது.

முன்னதாக முதலில் பேட் செய்த இந்திய ஏ அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 277 ரன் எடுத்திருந்தது.

**********

பேட்மிண்டன்

ஆஸ்திரேலிய ஓப்பன் பேட்மிண்டன் போட்டிகள் சிட்னியில் இன்று தொடங்கியது.

இதில் இந்தியாவின் H.S. பிரணாய், கிரண் ஜார்ஜ், தருண் மன்னேபள்ளி பி.வி.சிந்து மாள்விகா பன்சோத், ஆகர்ஷி கஷ்யப் உள்ளிட்டோர் களமிறங்க உள்ளனர்.

**********

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது